Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ருத்ரைகாதசினீ
ஷஷ்டிதம அப்த பூர்த்தி

ஒரு விளக்கம்

ஆக்கியோன்:

சுபஸ்ரீ வித்யா சங்கர சிவாச்சாரியார்
திருநெல்வேலி டவுண்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ

உங்கள் பார்வைக்கு!

திரு. சௌமிய நாராயணன், தெற்கேதெரு, திரு வனந்தபுரம், அவர்களின் சஷ்டிதம அப்த பூர்த்தியை முன் னிட்டு நமக்கு ஒரு சிறிய வழிகாட்டியாக சிறிய நூல் ஒன் றினை எளிய நடையில் நெல்லை சிவஸ்ரீ வித்யாசங்கர சிவாச்சாரியார் அவர்கள், எழுதியிருக்கிறார்கள். இச்சந்தர்ப் பத்தில் இது வெளியிடப் படுகிறது.

சமீப காலங்களில், பலசடங்குகளையும், வைப வங்களையும், நாம் எதற்காகச் செய்கிறோம்? அதன் சிறப்பு அம்சம் யாவை? எதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்? முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய அம் சங்கள் எவை? என்பவைகளை புரிந்து கொள்ளாமலேயே செய்கிறோம். ஆனால் செய்யவேண்டும் என்ற ஆசைமட் டும் நம்மனதில் இருக்கிறது.

இந்த நூல் ஸ்ரீ ருத்ர ஏகாதசினீ, சஷ்டிதம அப்தபூர்த்தி குறித்து விளக்கம் கூறும் விதத்தில் அமைந் துள்ளது. மிக எளிமையான வழிகாட்டி.

சிவஸ்ரீ வித்யாசங்கர சிவாச்சாரியார் அவர்க ளின் முயற்சிக்கு எங்களது பணிவான நன்றிகலந்த நமஸ் காரங்கள். இதுபோன்ற பல விஷயங்களையும், அன்னா ரின் மேலான அனுபவங்களின் அடிப்படையில் நம்போன்ற விருப்பம் உள்ளவர்களுக்காக வெளியிட முன்வர வேண் டும் என்பது நமது வேண்டுகோள்.

வாழி நலம் சூழ!

இவண்

இராம. பாலசுந்தரம்,

பார்வதிபுரம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ருத்ரைகாதசினீ - ஒரு விளக்கம்

நமது இல்லங்களில் ஷஷ்டிதம அப்த பூர்த்தி, சதா பிஷேகம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது அன்றைய தினமோ அதற்கு முதல் நாளோ "ருத்ரைகாதசி" என்று வைதிகமான ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதைக் காண்கிறோம். இதன் முழுத் தன்மைகளையும் நாம் அறிந்து கொள்ள முயற்சிப்போம். அதனைப் பற்றிக்கூறுவதே இக் கட்டுரையின் நோக்கம். ருத்ரைகாதசி பற்றிய விஷயங்களைத் தெரியாதவர்களுக்கும் இதனை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆதங்கத்தின் அடிப்படையில்தான் இக் கட்டுரை எழுதப் பட்டுள்ளது.

முதலில் "ருத்ரைகாதசி" என்ற பதப்பிரயோகம் வழக்கத்தில் இருந்து கொண்டுவருகிறது சரியானது அல்ல. சில வார்த்தைகளை நம்மையறியாமலேயே தவறாகப் பயன்படுத்தி வருகிறோம். சரியான வார்த்தைகளை அறிந்து கொள்ள முயலுவது மிக முக்கியம். "ருத்ரைகாதசினீ" என்பதே சரியான பதப் பிரயோகம்.

ஸ்ரீ ருத்ரனைப் பற்றிய அவனுடைய பெருமைகளையும் நாமங்களையும் சொல்லுவதே ஸ்ரீ ருத்ரம் என்பது.

ருதம் த்ராவயதீதி ருத்ர:

துக்கத்தைப் போக்குபவன் எவனோ அவன் ருத்ரன்.

துக்கம் என்பது எல்லோருக்கும் ஒவ்வொருவிதத்தில் இருக்கிறது. நாம் இப்பொழுது அடைகின்ற துக்கங்களெல்லாம் நிரந்தரமானது அல்ல. நிரந்தரமான துக்கம் பிறவித்துன்பம். இதனை நீக்குபவன் ஸ்ரீ பரமேஸ்வரனே. நாம் செய்கின்ற பாபங்களையெல்லாம் போக்குபவனும் இவனே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகையினால்தான் ருத்ரைகாதசினீ சங்கல்பத்தில் கூட "ருத்ரைகாதசினீ ஆக்ய மஹா பிராயச்சித்த கர்ம கரிஷ்யே" என்று சொல்லப் படுகிறது. நமது பூஜைகளில் தொன்று தொட்டு ஸ்ரீ ருத்ரம் ஜபிக்கப்பட்டு வருகிறது.

பிராமணர்கள் முதலில் தனது வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். அது முடியாதவர் தனது வேத சாகையிலுள்ள உபநிஷதம் மற்றும், கீதை, விஷ்ணு ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ ருத்ரம், புருஷ ஸூக்தம் இவைகளைத் தினந்தோறும் படிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஒரு மரம் செழிப்பாக வளரவேண்டுமானால் தண் ணீரை மரத்தின்மேல் தெளிப்பதில்லை. மரத்தின் அடியில் தான் விடுகின்றோம். மரத்தின் அடியில் விடுகின்ற நீரினால் மேலே உள்ள கிளைகளெல்லாம் செழித்துப் பலனைத் தரு கின்றன. அதுபோல் ஸ்ரீ ருத்ரத்தை ஜபிப்பதினால் எல்லா தேவதைகளும் வணங்கப்படுகின்றன. திருப்தியும் அடை கின்றன.

वृक्षस्य मूलसेकेन शाखाः पुष्यन्ति वै तथा
शिवे रुद्रजपात् प्रीते प्रीता एवास्य देवताः
अतो रुद्रजपादेव व भुक्ति मुक्ति प्रसिद्यतः

விருஷஸ்ய மூலஸேகேந ஸாகா: புஷ்யந்தி வை ததா
சிவே ருத்ர ஜபாத் ப்ரீதே ப்ரீதா ஏவாஸ்ய தேவதா:
அதோ ருத்ர ஜபா தேவ புக்தி முக்தி பிரஸித்யத:

என்று சூதஸம்ஹிதை கூறுகின்றது. எவரெவர் எந்த பல னைக்கருதி ஜபம் செய்கிறார்களோ அவரவர்கள் அந்தப் பலனை அடைகிறார்கள்.

பரமேஸ்வரனுக்கு அமிர்தன் என்றொரு பெயர் ஸ்ரீ ருத்ரத் தில் அந்த அமிர்தனுடைய நாமங்கள் படிக்கப்படுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

एतानि अमृतस्य नाम धेयानि

"ஏதாநி அமிருதஸ்ய நாமதேயாநி"

காயத்ரியில் வரும் பர்க சப்தம் அவனையே குறிக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அவன் பிரம்மம், அமிரதம், அவன் பர்கன்

एतत् ब्रह्म एतत् अमृतं एतत् भर्गः

ஏதத் பிரம்ம ஏதத் அமிர்தம், ஏதத் பர்க:

என்று மைத்ராயணி உபநிஷத் கூறுகின்றது.

ஸ்ரீ ருத்ரத்தில் சொல்லப்படுகின்ற ருத்ரன் யார் என்பது ஒரு கேள்வி. பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற வரிசையில் சொல்லப்படுகின்ற ருத்ரனா? இதனிலும் வேறானவனா? பிரம்மா சிருஷ்டிக்கிறார். விஷ்ணு காப்பாற்றுகிறார். ருத்ரன் அழிக்கிறார், இம்மூவர்க்கும் மேலான ஒரு பொருள் இருக்கிறது. அதுவே பிரஹ்மம். அதுவே சிவம்.

யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே!

யேந ஜாநாதி ஜீவந்தி! யத் ப்ரத்யத்யபி

விஸந்தீதி! தத் விக்ஞாய! ஸ்வதத் ப்ரஹ்ம.

இந்த உலகம் எதனின்றும் தோன்றுகின்றது. எதனால் (நம் கண்ணுமுன்னே) நிற்கின்றது. எதனில் லயமடைகின்றது. அதனை நீ அறிவாயாக, அதுவே பிரஹ்மம் என்று தைத்திரியம் கூறுகின்றது. அந்தப்பிரம்மமே பிரஹ்மா விஷ்ணு ருத்ரர்களுக்கும் மேலான துரிய வஸ்து. அது சிவம்.

பிரம்மாதிபதிர் பிரஹ்மணோதிபதிர்

பிரஹ்மா சிவோமே

அஸ்து ஸதாசிவோம்

என்றும் வேதம் கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூவர்க்கும் மேலான நாலாவது வஸ்து சிவபெருமானே. ப்ரபஞ்சோப சமம் சாந்தாம் சிவம் அத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே!

மாண்டுக்கியோபநிஷத்

நரஸிம்ம பூர்வதாபிநி உபநிஷத்

நிருஸிம்ம உத்தர தாபிநி உபநிஷத்

நாரத பரிவ்ராஜ கோபநிஷத்

ராமோத்தரதாபிநி உபநிஷத்

"அத்வைதம் சதுர்த்தம் பிரம்ம விஷ்ணு ருத்ராதீதம்

ஏகமாஸாஸ்யம் பகவந்தம் சிவம்"

'பஸ்ம ஜாபால உபநிஷத்'

இன்றும் அதர்வசிரஸ், அதர்வ சிகோபநிஷ், சாந்தோக்ய உபநிஷத் முதலியவற்றில் எல்லாம் பேசப்படுகிறது.

தமீஸ்வராணாம் பரமம் மஹேஸ்வரம்

தமீ தேவதாநாம் பரமம் ச தைவதம்!

பதிம் பதிநாம் பரமம் புரஸ்தாத்

விதாம தேவம் புவனே ச மீட்யம்!

-சுவேதாஸ்வதர உபநிஷத்

விரிவு கருதி இங்கு சுருக்கமாகக் கூறப்படுகிறது.

பொதுவாக பிராமணனுக்கு உரிய தெய்வம் பர மேஸ்வரனே. विप्राणां दैवतं शंभुः விப்ராணாம் தைவதம் சம்பு: என்று மனுஸ்மிருதி கூறுவதாகச் சொல்லப்படுகிறது. யஜுர் வேதத்தில் ஒரு வாக்யம் வருகிறது. உண்மையினின்றும் தவறாதே தருமத்தினின்றும் தவறாதே, நீதியினின்றும் தவ றாதே, விபூதியை அசட்டை செய்யாதே என்று வருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

स्वाध्याय प्रवचनाभ्यां न प्रमदितव्यम्

ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம்

என்று ஒரு வாக்கியம் வருகிறது. தினசரி தான் படித்த வேதத்தை ஒரு முறை சொல்லிப்பார்க்க வேண்டும் என்று பொருள். வேதத்தை அத்யயனம் செய்யாதவர்களும் அதனைச் சொல்ல அவகாசம் இல்லாதவர்களும் என்ன செய்வது? அதற்கு ஆதித்ய புராணம் பதில் சொல்கிறது.

प्रणवशतरुद्रियं तथा अथर्वशिर अथर्वशिखा

ऐ तेषां जपः पुत्र स्वाध्याय इति प्रकीर्तितः

பிரணவம், சதருத்ரீயம், அதர்வசிரஸ், அதர்வசிகை என்பவற்றின் ஜபமே ஸ்வாத்யாயம் என்று சொல்கிறது.

ஸ்ரீ ருத்ரம் பல சாகைகளிலும் படிக்கப்படுகின்றன. (குறிப்பாக நூறு சாகைகளில்) ருக்வேதத்தில் பஞ்சருத்ரம் என்று சொல்லப்படுகிறது. சாமவேதத்திலும் ஸ்ரீ ருத்ரம் வருகின்றது. சுக்லயஜுர் வேதத்தில் காண்வ சாகை, மாத்யந்தின சாகை மற்றும் தைத்திரியம், மைத்ராயணீயம் முதலிய சாகைகளிலும் ஸ்ரீ ருத்ரம் வருகின்றது. ஒவ்வொரு சாகைகளிலும் சிற்சில வேறுபாடுகளுடனும், ஸ்வரவேறுபாடுகளுடனும் காணப்படுகின்றன. கைவல்யோ உபநிஷத், ஸீதஸம்ஹிதை, மஹாபாரதம், பிரம்மோத்தர காண்டம், கூர்ம புராணம் முதலியவற்றில் ஸ்ரீ ருத்ரத்தின் பெருமை கூறப்படுகின்றன. ஆனால் சதருத்ரீயம் என்று வரும்பொழுது எல்லா வேத சாகைகளைச் சேர்ந்தவர்களும் கிருஷ்ண யஜுர்வேத தைத்திரிய சாகையிலுள்ள ஸ்ரீ ருத்ரத்தையே ஜப, ஹோம, பாராயணங்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

யஜுர்வேதம் ஏழு காண்டங்களையுடையது. அதனில் நடுவாக உள்ளது 4-வது காண்டம். அந்த நாலாவது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காண்டத்தில்தான் ஸ்ரீ ருத்ரம் வருகிறது. இந்த ஸ்ரீ ருத்ரம் 11 அனுவாகங்களையுடையது. (Eleven sub divisions) இதனை ருத்ரோபநிஷத் என்றும் சொல்லப்படும். இந்த 11 அனுவாகங்களிலே நடுவாக உள்ளது ஆறாவது அனுவாகம். இதில் தான் नमशिवाय च நம சிவாய ச என்று ஸ்ரீ பஞ்சாக்ஷரம் வருகின்றது. இதுவே "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே என்று தமிழ்த்தேவாரத்திலும் வருகிறது.

ஸ்ரீ ருத்ரத்திலுள்ள ஒவ்வொரு மந்திரத்திற்குமே ஒவ்வொரு பலன் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சதருத்ரத்தில் உள்ள ஒவ்வொரு நாமாவும் தமிழ்த் திருமுறைகளில் பல இடங்களிலும் வருகின்றன. இப் பஞ்சாக்ஷரத்திலும் நடுவாக வருவது शिव என்ற இரண்டெழுத்து.

ஸ்ரீமத் பாகவதத்தில் தக்ஷனிடம் தாக்ஷாயணி கூறுவதாக ஒரு சுலோகம் வருகின்றது.

यद्यक्षरं नाम गिरेरितं नृणां
सकृत्प्रसङ्गादध माशु हन्तितत.!
पवित्रकीर्तिं तमलङ्घ्यशासनं
भवानहोद्वेष्टि शिवं शिवेतरः

பரமேஸ்வரனுடைய "சிவ" என்ற நாமத்தில் பெருமையை கூறுகிறது. சன்னியாசிகளும் இந்த ஸ்ரீ ருத்ரத்தைச் சொல்லவேண்டும் என்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ருத்ரத்தின் முதல் அனுவாகம் அவனுடைய பெருமைகளையும் பலவிதமான பலன்களையும் கேட்பதாக அமைந்துள்ளது. 2வது அனுவாகம் முதல் 9வது அனுவாகம் வரை அவருடைய நாமங்களைச் சொல்லி வணங்குவதாக அமைந்துள்ளன. 10வது அனுவாகம் பக்தர்களின் முறையான வேண்டுகோள்களை முன்வைக்கின்றன. Consists of prayers to the Lord. 11வது அனுவாகம் ஸ்ரீ ருத்ர

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

னின் சாரூபத்தைப் பெற்ற ருத்ர கணங்களைப் பற்றிக் கூறுகின்றன. 2 முதல் 9 அனுவாகம் வரை அவனுடைய 300 நாமங்களைக் கூறுகின்றன.

ஒருதடவை ஸ்ரீ ருத்ரத்தின் 11 அனுவாகங்களையும் கூறி சமகத்தின் முதல் அனுவாகத்தைக் கூறுவது. மறுபடியும் ஸ்ரீ ருத்ரத்தின் 11 அனுவாகங்களையும் சொல்லி சமகத்தின் 2வது அனுவாகத்தைகூறுவது. இவ்விதமாக ஸ்ரீ ருத்ரத்தின் 11 அனுவாகங்களையும் 11 தடவை சொல்லி சமகத்தின் 11 அனுவாகங்களையும் 1 தடவை சொல்வதற்கு சதருத்ரீயம் என்று பெயர்.

இதனை 11 வேத விற்பனர்களைக் கொண்டு சொல்லப்படுவதற்குத் தான் "ருத்ரைகாதசினீ" என்று பெயர். அதாவது 11 x 11 = 121 தடவை ஸ்ரீ ரத்ரமும் 11 தடவை சமகவும் ஜபிக்கப்படுகிறது. இவ்வாறு 11 ருத்ரைகாசினி கொண்டது மகா ருத்ரம். 121x11=1331. 1331 தடவை ஸ்ரீ ருதரமும் 121 தடவை சமகமும் சொல்லப்படும் மகா ருத்ரம் x 11= அதிருத்ரம் என்று சொல்லப்படும். 1331 x 11 = 14,641 தடவை ஸ்ரீ ருத்ரமும் 1331 தடவை சமகவும் ஜபிக்கப்பட வேண்டும்.

மந்திர மஹார்ணவம் முதலிய நூல்களில் ஸ்ரீ ருத்ரத்தின் பிரயோகங்களைப் பற்றி கூறுகின்றன.

ஸ்ரீ ருத்ர ஹோம விதானங்கள் பலப் பிரகாரமாகக்கூறப்படுகின்றன. அதுபற்றி எழுதினால் மிக விரிவாகும் என்று கருதி எழுதவில்லை.

முடிவாக ருத்ரைகாதசினீ நடக்கின்ற இடங்களில் நடைபெறுகின்ற தவிர்க்க வேண்டிய சில விஷயங்களை இங்கு சொல்ல நினைக்கின்றேன்.

ருத்ரைகாதசினியின் போது கும்பத்திற்கு அர்ச்சனை செய்கிறார்கள். அர்ச்சனையில் சொல்லப்படுகின்ற நாமாவளிக்குப் பிரமாணம் இருக்கவேண்டும். அஷ்டோத்திரம், ஸஹஸ்ரநாமம் என்றால் அது ஏதாவதொரு புராணங்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

களில் சுலோகமாக இருக்கும். அதனையே நாமாவளியாகப் பிரித்து சொல்லப்படும். அப்படிப் பார்க்கும் பொழுது ருத்ரத்ரிசதிக்கு எந்தப்புராணத்தில் பிரமாணம் இருக்கிறது என்று தெரியவில்லை. தெரிந்தவர்கள் தக்க பிரமாணத்துடன் சொன்னால் ஏற்றுக் கொள்ளலாம். அதுவும் इषुमद्भ्यो नमः धन्वाविभ्यश्च नमः, वो नम, என்று கூறுகிறார்கள். இஷுமத்பய; என்பதற்கு அடுத்து நம: பதம் வேதத்தில் இல்லை. தன்வாவிப்யஸ்ச என்ற பதத்திற்கு அடுத்தும் நம: பதம் இல்லை. வோ நம: வ: என்னில் தங்களுக்கு என்று பொருள். என்றும் சொல்கிறார்கள். இந்த முறையெல்லாம் த்ரிசதியில் சேராத இட்டுக்கட்டப்பட்டவையே. வேதத்தில் எந்தவொரு இடத்திலும் புதிதாக ஒரு பதத்தைச் சேர்ப்பதற்கோ, வேறு ஒன்றைச் சொல்வதற்கோ நமக்கு அதிகாரம் கிடையாது. அப்படிச் செய்வது பாபமும் கூட. தங்களுக்கு நமஸ்காரம் என்று எந்த நாமாவையும் குறிக்காமல் நமஸ்காரம் என்பது எந்த அர்ச்சனையிலும் இல்லை.

जपहोमार्चना भिषेक विधिं व्याख्यास्यामः

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகலின் அர்ச்சனை உண்டு என்று சொல்கிறார்கள். அர்ச்சனை என்ற பதம் இதைத்தான் குறிக்கிறது என்று சொல்ல முடியாது. த்யாந ஆவாஹநாதிகளுடன் செய்யப்படுகின்ற பூஜையையே இங்கு குறிப்பிடுவதாக எனது எண்ணம். அஷ்டோத்தரமோ, ஸஹஸ்ரநாமமோ செய்யலாம்.

அடுத்து கும்பத்திற்கு அர்ச்சனை செய்கிறார்கள். இவ்வர்ச்சனையை யார் யஜமானனோ அத்தம்பதியினர் மாத்திரமே செய்ய வேண்டும். அத்தம்பதியினர் மாத்திரம் செய்தாலே போதும். அவர்கள் நம்மை ஆசீர்வதிக்கும் போது அந்த பலன் நமக்குக் கிடைக்கும். ஏனென்றால் மந்திரபூர்வமாக ஆவாஹனம் செய்துள்ள சுவாமிக்கு, பூஜை செய்வதற்கான ஆசாரம், சுத்தி - மற்றவர்களுக்கு போதாது அல்லவா? எல்லோரையும் திருப்தி படுத்துவதற்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காக இவ்வாறெல்லாம் செய்கிறார்கள். ஸங்கல்பம் செய்து கொண்டவர் எவரோ அவர் மாத்திரமே பூஜை செய்ய தகுதியுடையவர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அபிஷேகம் செய்யும்பொழுது குடும்ப அங்கத்தினர்களைக் கொண்டு, வந்திருக்கக்கூடிய பெரியவர்களைக் கொண்டும் அபிஷேகம் செய்ய வைக்கிறார்கள். இதுவும் மிகவும் தவறு. மந்திரபூர்வமாக சாந்நிநித்யம் செய்யப்பட்ட புனித நீரை ஆச்சார்யன் வைதிகர்களின் துணை கொண்டு தான் அபிஷேகம் செய்ய வேண்டும்.

பிரதக்ஷிணம் பற்றியும் சில கருத்துக்கள். பிரதக்ஷிணம் செய்யும் பொழுது சிறியவர்கள் முன்பாகவும் மனைவி அதற்கடுத்தும் பின் கணவனும் வரிசையாகச் சுற்றவேண்டும் என்கிறார்கள். இதற்கு என்ன பிரமாணம் என்று யாராலும் சொல்லமுடியவில்லை. ஸ்த்ரீகள் பின்பு ஆண்கள் செல்வதா ஆண்கள் பின்பு ஸ்த்ரீகள் செல்வதா என்பது பற்றி யோசிக்க வேண்டும். அவரவர்கள் மனைவிகளும் குழந்தைகளும் கணவனைப் பின்தொடர்ந்து செல்வது தான் எனக்கு முறையாகப்படுகிறது. பிரம்மஶ்ரீ A.S. சுப்பு கிருஷ்ணசிரௌதிகள் மற்றும் சில பெரியவர்கள் இதனை ஏற்றுக் கொள்கிறார்கள்.

அர்ச்சனை செய்யும் பொழுது புஷ்பம் உள்ள தாம்பாளத்தை மடியில் வைத்துக் கொண்டோ, புஷ்பத்தை இடது கையில் வைத்துக் கொண்டோ அர்ச்சனை செய்யக் கூடாது.

இறுதியாக ஒன்று. எந்த கிராமத்திலாவது, நகரத்திலாவது ஶ்ரீ ருத்ரம் ஜபிக்கப்படுகிறதோ அங்கு வியாதி, துர்பிக்ஷம், திருடர்கள் பயம், மனக்கிலேசம் இவைகள் வராது.

रुद्राध्यायि वसद्यत्रग्रामेवा नगरेऽपिवा!
व्याधि दुर्भिक्ष चोरादिवाध तत्र न जायते!!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ருத்ராத்யாயி வஸத்யத்ரக்ராமேவா நகரேऽபிவா!
வ்யாதிதுர்பிக்ஷ சோராதிபாதா தத்ர ந ஜாயதே!!

மேற்கூறிய சிறப்புகள் அடங்கிய ருத்ர ஏகாத சனீயை கடைப்பிடிப்பது, எத்தனைய சிறப்புகளைக் கொண்டது என்பதனைப் பார்த்தோம்.

பூரண-வைதீக கர்மாவான ஸ்ரீருத்ர வழிபாட்டினை சிரத்தையுடன் நடத்துவதின் மூலம் நம்முடைய சகல பாவங்களும் அகன்று, ஈஸ்வர கிருபைக்கு பாத்திரர்களாவோம் என்பதே ஸ்ரீருத்ர ஏகாதசனியின் நோக்கம்.

திரு. சௌம்ய நாராயணன் அவர்கள் இதனை சிரத்தையுடன் 11 முறை இந்த ஆண்டில், ருத்ர ஏகாதசினீ நடத்தி அபிஷேகம், செய்து கொண்டுள்ளது, அவருக்கு கிட்டிய மகாபாக்கியம் எல்லோருக்கும் இதுபோல் கிடைக்காது.

எனவே இது சந்தர்ப்பத்தில் மேற்கூறிய கருத்துக்களை உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேணடும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஷஷ்டிதம அப்தபூர்த்தி வைபவ தம்பதிகள் எல்லா நலன்களும் பெற்று, ஆரோக்யத்துடன் நூற்றி இருபது ஆண்டுகள் வாழ்ந்து சாதனைகள் படைத்திட எல்லாம் வல்ல ஸ்ரீருத்ரனை வணங்குகின்றேன்.

-சிவஸ்ரீ. சுப. வித்யாசங்கரசிவாச்சாரியார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஷஷ்டிதம அப்த பூர்த்தி ஓர் விளக்கம்

நமது ஹிந்து மதத்திற்கு பிரமாண நூல் ருக்காதி நான்கு வேதங்களே. வேதத்திற்கு அங்கங்களாக ஆறு நூல்கள் இருக்கின்றன. இதற்கு வேதாங்கங்கள் என்று பெயர். அவை சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜோதிடம் ஆகும்.

சிக்ஷை :- வேதங்களை உச்சரிக்கும் முறையை விளக்குவது.

கல்பம் :- வேதங்களில் கூறும் கர்மங்களை அனுஷ்டிக்கும் முறையைக் கூறுவது.

வியாகரணம்:- வேதங்களிலுள்ள சொற்களில் இயல்புகளையும் இலக்கணங்களையும் விளக்குவது.

நிருக்தம்:- வேதங்களின் கூறப்படும் பரிபாஷைச் சொற்களுக்குப் பொருள் கொள்ளும் முறையை விளக்குவது.

சந்தஸ்:- வேதமந்திரங்களின் செய்யுள் அமைப்பு முறைகளையும், அதற்குரிய எழுத்துக்களின் எண்ணிக்கைகளைப் பற்றியும் விளக்குவது.

ஜோதிடம்:- வேதங்களில் கூறப்படும் கன்மங்களை அனுஷ்டிப்பதற்குரிய கால விசேடங்களை உணர்த்துவது.

இந்த ஆறு அங்கங்களின் துணை கொண்டுதான் வேதத்திற்குப் பொருள் காண வேண்டும். இதில் கல்பம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பதினுள்தான் ஆஸ்வலாயனம், ஆபஸ்தம்பம், போதாயனம், சத்யாஷாடம், விஸ்வாமித்ரம் முதலியன. ருக்வேத்தைச் சேர்ந்த வேம்பத்தூரார்கள் ஆஸ்வலாயன சூத்திரத்தை அனுஷ்டிக்கின்றனர். கடையநல்லூரைச் சேர்ந்த சிலர் போதாயன சூத்திரத்தை அனுஷ்டிக்கின்றனர்.

நமது கர்மாக்கள் அனைத்தும் காலத்தை முதன்மைப் படுத்தியே கூறுகின்றன. ஆதலின் காலம் மிகவும் முக்கியமானது. இவ்வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற கர்மாக்களை அனுஷ்டிப்பதற்கு நீண்ட ஆயுளும் ஆரோக்யமான சரீரமும் தேவை. கர்மாக்களை அனுஷ்டிப்பதற்குரிய ஆயுளும் ஆரோக்யமான சரீரமும் இருந்தால்தான் அக்கர்மாக்களை அனுஷ்டித்து அதன் பலனை அடைய முடியும். மனிதனுடைய ஆயுள் நூறு என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதமே

சதமாநம் பவதி - சதாயு : புருஷ:

என்று சொல்கிறது. வேதங்களிலுள்ள கர்மாக்களை அனுஷ்டிப்பதற்குரிய ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அடைவதற்கான சாந்தி கர்மாக்களை அவ்வப்போது அனுஷ்டிக்கச் சொல்லியிருக்கின்றன.

நித்திய கர்மானுஷ்டானம்

நமது கர்மாக்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். நித்யம், நைமித்திகம், காமியம் என்பன அவை. தினசரி கண்டிப்பாகச் செய்ய வேண்டிய ஸ்நானம், சந்தியாவந்தனம், ஔபாஸனம், பூஜை முதலியன நித்ய கர்மானுஷ்டானம் என்று சொல்லப்படும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நைமித்திக கர்மானுஷ்டானம்

நட்சத்திரம், திதி இவைகளை முன்னிட்டுச் செய்கின்ற கர்மாக்கள் நைமித்திகம் எனப்படும். மாதப்பிறப்பு, அமாவாசை, கிரகணம், மகாளயம், தக்ஷிணாயன, உத்தராயண புண்யகாலம், அர்தோதயம், மகோதயம் முதலிய காலங்களில் அனுஷ்டிக்கப்படுவது நைமித்திகம்.

காமியகர்மானுஷ்டானம்

முக்கியமாக வாழ்க்கையில் தேவைப்படும் பொருள்களை அடைவதற்கு குறிப்பிட்ட காரியம் நிறைவேறுதற்காகவும் செய்யப்படும் கணபதிஹோமம், நவக்கிரகஹோமம், குலதெய்வ வழிபாடு முதலியவைகள் காமியம் எனப்படும். நித்தியமும், நைமித்திகமும் கண்டிப்பாகச் செய்யப்படவேண்டியவைகள்.

பிறந்தநாள் முதல் அவ்வப்பொழுது செய்வதற்கு சாந்தி கர்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. வாழ்க்கையின் நடைபாதையில் எத்தனையோ, இன்னல்கள் இடையூறுகள் வருகின்றன. அதனைக் கடந்து செல்ல வேண்டியதிருக்கிறது. அவ்வின்னல்களும் இடையூறுகளும் ஏற்படுவதற்கு நாம் முன்பிறவிகளிலும் இப்பிறவியிலும் செய்த பாபங்களே காரணம். அதனை நாம் நினைவு கூர்ந்து கழுவாய் (பரிகாரம்) தேடிக் கொள்ள வேண்டும். அவ்வகைக்காகச் செய்யப்படும் கர்மாக்களே சாந்தி கர்மாக்கள். அவை ஐந்து. முதன் முதலில் பிறந்து ஓராண்டு நிறைவடையும் பொழுது ஜன்ம நட்சத்திரத்தன்று செய்யப்படும் சாந்தி கர்மா அப்தபூர்த்தி என்று பெயர். இதனைப்ப பிறந்த நாள் என்கிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒவ்வொருவருக்கும் அவரது ஜன்மநட்சத்திரம் அரிஷ்டகாலம். தான் பிறந்த மாதத்தில் வரும் ஜன்ம நட்சத்திரமும் அரிஷ்ட காலமே. ஆகையினால் மாதந்தோறும் வரும் ஜன்ம நட்சத்திரத்தன்று சாந்தி செய்து கொள்ள வேண்டும். அது முடியாதவர்கள் வருஷ ஜன்ம நட்சத்திரத்தன்றாவது செய்து கொள்ளவேண்டும். இதனால்தான் சில சுபகாரியங்கள் ஜன்ம நட்சத்திரத்தன்று செய்யக்கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

மனிதனின் வாழ்வில் இரண்டாவதாக வருவது அவனுக்கு 59 வயது முடிந்து அறபதாவது வயது தொடங்கும் பொழுது. அப்பொழுது செய்யவேண்டிய சாந்திக்கு உக்ர ரத சாந்தி என்று பெயர். வேத நூல்களின்படி ரதம் என்ற சொல்லுக்கு பள்ளம் என்று பொருள். வாழ்க்கைப் பாதையில் வருகின்ற பள்ளத்தில் விழுந்து எழவேண்டும்.

ஷஷ்டிதம அப்த பூர்த்தி

அறுவது முடிந்து அறுபத்தி ஒன்றாவது வயதில் தான் பிறந்த வருடம் பிறந்த மாதம் பிறந்த நட்சத்திரம் வரும் பொழுது செய்து கொள்ள வேண்டிய சாந்திக்கு ஷஷ்டிதம அப்த பூர்த்தி என்று பெயர். இந்த நாளில் அவன் பிறக்கும் பொழுது என்ன கிரஹ அமைப்புகள் இருந்ததோ அதே அமைப்பு ஷஷ்டிதம அப்த பூர்த்தியன்று வரும். அதாவது அவனுக்கு இரண்டாவது வாழ்க்கை தொடங்குகிறது. சாந்தி கர்மாக்கள் அனைத்துமே முழுக்க வைதிக நிகழ்ச்சிகள். அதில் லௌகிகத்திற்கு இடமேயில்லை.

இந்த சாந்தி கர்மாக்கள் எப்படிச் செய்யவேண்டும் என்று சாந்தி ரத்னாகரம், சாந்தி குஸுமாகரம், ருக்வேத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிரம்ம கர்ம சமுச்சயம் முதலிய நூல்கள் கூறுகின்றன. ஷஷ்டி என்றால் ஆறு; ஷஷ்டிஹி என்றால் அறுபது. ஷஷ்டியப்த பூர்த்தி என்றால் அறுபதாவது ஆண்டு என்று பொருள்படுகிறது. ஆனால் அறுபது முடிந்து அறுபத்தி ஒன்றாவது வருடத்தில் தான் ஷஷ்டியப்த பூர்த்தி கொண்டாடுகிறோம். ஆகையினால் ஷஷ்டிதம அப்தபூர்த்தி என்பதே சரியான வார்த்தை.

ஷஷ்டிதம அப்த பூர்த்தி இரண்டு விதமாகச் செய்யப்படுகின்றன. சௌநகர் என்ற ருஷி சொல்லியபடி செய்வதற்கு சௌநகோத்தபிரகாரம் என்றும் ரோமேசரிஷி கூறியபடி செய்வதற்கு ரோமேசோக்த பிரகாரம் என்று சொல்லப்படும். மதுரைக்கு வடக்கே சௌநகோக்த பிரகாரம் அனுஷ்டிக்கப்படுகிறது. திருநெல்வேலி ஜில்லா, கன்னியாகுமரி ஜில்லா, திருவனந்தபுரம் போன்ற இடங்களில் ரோமேசோக்த பிரகாரம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த இரண்டிலும் அதிக வித்தியாசம் இல்லை. கும்பங்களில் தேவதைகளை ஆவாஹிக்கப்படுகின்ற வரிசைக் கிரமங்களில்தான் வேறுபாடு இருக்கின்றது. முக்கியமாக ருக்வேதிகள் ருக்வேத பிரம்மகர்ம சமுச்சயத்தை மையமாக வைத்துக் கொண்டு செய்கிறார்கள்.

ஒருமாதத்தில் இரண்டு ஜன்ம நட்சத்திரம் வந்தால் முந்தின ஜன்ம நட்சத்திரத்தன்று நடத்தவேண்டும் அக்காலத்தில் ஏதேனும் அசௌகர்யப்பட்டு நடத்த முடியாமல் போனால் 10வது நட்சத்திரத்தன்றாவது பத்தொன்பதாவது (19) நட்சத்திரத்தன்றாவது நடத்தவேண்டும். பிந்தின நட்சத்திறத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போட்டால் அப்பொழுது ஏதாவது அசௌகர்யம் ஏற்பட்டு விட்டால், பின் செய்யும் பொழுது மாதமே மாறிவிடும். சிலசம

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யம் வருடமே மாறிவிடும். பிராமணர்கள் முதல் எல்லா வர்ணத்தாரும் ஸ்த்ரிகள் உட்பட அனைவரும் ஷஷ்டிதம அப்த பூர்த்தி செய்து கொள்ளலாம். இதனை திருநெல்வேலி ஜில்லாவிலும் கேரள தேசத்திலும் அனுஷ்டிக்கப்படுகிறது. ஸ்த்ரீகளுக்குக் கிடையாது என்பதொரு பக்ஷமாக இருக்கிறது. இதனை அறிஞர்களின் ஆய்வுக்கு விட்டு விடுவோம்.

ஷஷ்டிதம அப்த பூர்த்தியிலோ, ஸதாபிஷேகத்திலோ திருமாங்கல்ய தாரணம் சொல்லப்படவில்லை. ஆனால் தற்பொழுது வைதிக காரியங்களை விட்டுவிட்டு அல்லது குறைத்துக்கொண்டோ மாங்கல்ய தாரணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இது இல்லை என்றால் பெண்களுக்கு ஏதோ குறையிருப்பதாகப்படுகிறது. மாங்கல்யதாரணமே லௌகிக கர்மாவாக இருக்கும் பொழுது அதன் முகூர்த்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வைதிக கர்மாக்களை சுருக்குவதோ, வேகமாக நடத்தி முடிப்பதோ கூடாது. மாங்கல்யதாரணம் முன்முகூர்த்தமாக இருந்தால் முதல்நாள் மாலை கும்பப் பிரதிஷ்டை பூஜை, ஜபங்களை முடித்துக் கொண்டு மறுநாள்காலை ஹோமம், அபிஷேகம், மாங்கல்ய தாரணம் வைத்துக் கொள்ளலாம். இதைவிடுத்து வைதிக காரியங்களைக் குறைப்பது சாந்தி கர்மாக்களுக்குப் பொருத்தமானதல்ல.

சௌநகோக்தம், ரோமே சோக்தம், பிரம்மகர்ம சமுச்சயம் முதலிய நூல்களின்படி ஆராய்ச்சி செய்ததில் இந்த வெளியீட்டின் பின் பகுதியில் கண்டபடி கும்பங்கள் பிரதிஷ்டை செய்யலாம் என்பது எனது அபிப்பிராயம். பூஜை செய்யப்படும் புனித நீரை ஆச்சார்யர்கள்தான் அபிஷேகம் செய்யவேண்டும். அவர்கள்தான் பிராணப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். மற்றவர்கள் அபிஷேகம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்வது உகந்தது அல்ல. சாஸ்த்ரோக்தமும் அல்ல. சிலர் லௌகிகமாக உள்ள பெரியவர்களைக் கொண்டும் அபிஷேகம் செய்விக்கிறார்கள். இதுவும் சரியன்று. ஆகலின் பிராசீன ஸம்ப்ரதாயங்களையும் தேசாசாரத்தையும் அனுசரித்து அறுபதாண்டு நிறைவு விழாவை அழகுடன் நடத்திக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

சிறியேனுடைய எழுத்தில் ஆங்காங்கு பிழைகள் இருப்பின் எடுத்துச் சொன்னால் ஏற்புடையதாயின் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

சிவஸ்ரீ சுப. வித்யாசங்கர சிவாச்சாரியார்
திருநெல்வேலி

தொ.பே.எண்.
2322247
செல்: 9443554923

துணை நின்ற நூல்கள்

1. சாந்தி குசுமாகரம்
2. சாந்தி ரத்னாகரம்
3. ருக்வேத பிரம்மகர்ம சமுச்சயம்
4. சஷ்டிதம அப்தபூர்த்தி விதாயம்
(திருநெல்வேலி ஆண்டி வாத்யார் எழுதியது)

துணை நின்றவர்கள்

பிரம்மஸ்ரீ Y. ராமசுவாமி ஸாஸ்திரிகள் - நெல்லை

பிரம்மஸ்ரீ சுத்தமல்லி சுப்பிரமணிய கணபாடிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிரியா கிரமம்

அனுக்ஞை
கணபதி பூஜை
நாந்தி
கிருஹப்ரீதி
கிருச்சிரம்
வைஷ்ணவ சிரார்த்தம்
தசதானம்
பிராச்யாங்க கோதானம்
ஆச்சார்ய வரணம்
ருத்விக்குகள் வரணம்
புண்யாஹவாசநம்
கும்ப பூஜை
ஜபம்
ஹோமம்
பிரம்ம தக்ஷிணை பூஜை
அபிஷேக, முகூர்த்த கிரஹப்ரீதி
அபிஷேகம்
நூதன வஸ்த்ர தாரணம்
விசேஷ தானாதிகள்
ஜபஹோம தக்ஷிணை
மாங்கல்ய தாரண முகூர்த்த தலவித ஸ்னானம் கிரஹப்ரீதி
மாங்கல்யதாரணம்
மைத்துனர் சீர்வரிசை
ஆசீர்வாதம்
பலதானம் – நாத்தனார் மரியாதை
உதீச்சியாங்க கோதானம்
ஆச்சார்ய ஸம்பாவனை
வித்வத் ஸம்பாவனை
எதிர்சீர் ஸம்பாவனை
ஹாரத்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஷஷ்டிதம அப்தபூர்த்தி

சாமான் பட்டியல் (ஒரு சிறிய வழிகாட்டியாக)

மஞ்சள்
மஞ்சள் பொடி
மாப்பொடி
நெல்
பச்சரிசி
முழு உளுந்து
துவரம் பருப்பு
கோதுமை
பயறு
எள்ளு
தேங்காய்
பழம்

விபூதி
பச்சைக் கற்பூரம்
குங்குமப்பூ
ஏலக்காய்
கிராம்பு
லவங்கப் பட்டை
சாதிக்காய்
சாதி பத்திரி
வெட்டி வேர்
விளாமிச்சை வேர்
நெய்
தேன்

வெற்றிலை
பாக்கு
நெல் பொரி
சூடன்
வாசனைப்பத்தி
தீப்பெட்டி
விளக்குத் திரி
முப்புரி நூல்
கலர் நூல்
சந்தனம்
குங்குமம்
ரோஸ் வாட்டர்

நவக்கிரகத்திற்கு தான்யங்கள்

கோதுமை
பச்சரிசி
துவரை
பாசிப்பயறு
கொண்டைக்கடலை
மொச்சை
எள்ளு
முழு உளுந்து
காணம்
நெல்
நெய்
சர்க்கரை
உப்பு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜவுளி (வஸ்த்ரங்கள்)

கும்ப வஸ்த்ரம்	4 முழத்தில்	2
	3 முழத்தில்	2
	1 முழத்தில்	16
பூர்ணாகுதிபட்டு		1
வேதிகா வஸ்த்ரம்	9 x 5	1
ஆச்சார்ய வஸ்த்ரம்	9 x 5	1
ரித்விக்குகள் வஸ்த்ரம் (வைதீகர்களுக்கு நவக்கிரக வஸ்த்ரம் (டூபைடு) ரவிக்கைத்துணி 90 பாயிண்டு கொண்டது) (ஒவ்வொன்றும் ஒவ்வொரு கலர் இருக்க வேணடும்)	9 x 5	12
தீக்ஷா வஸ்த்ரம்	9 x 5	1
1 8 முழு புடவை - ரவிக்கை		1
தான வஸ்த்ரம்	9 x 5	1

யஜமானன் முகூர்த்த வேஷ்டி

யஜமான பத்னீ முகூர்த்த புடவை - ரவிக்கை

அவசியப்பட்டால் பந்துக்களுக்கு வஸ்த்ராதிகள்.

மாங்கல்யம், மெட்டி (தர்மபத்னிக்காக)

பாத்திரங்கள்

(புதியதாக வாங்க வேண்டியவை)

4 லிட்டர் பிடிக்கக் கூடிய தோண்டி	1
3 லிட்டர் பிடிக்கக் கூடிய தோண்டி	2
சிறிய தோண்டி	17
பஞ்ச பாத்திரம்	12

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நவக்கிரஹ தானங்களுக்கு கிண்ணங்கள்

நெய்	1
நெல்	1
சர்க்கரை	1
உப்பு	1
ஜலபாத்திரம்	1
விளக்கு	1
மணி	1
ரிரீக்ஷய ஆஜ்ய பாத்திரம்	1

தான சாமான்கள்

1. சந்தனக் கட்டை
2. கொடை
3. செருப்பு
4. ஆஸனப்பலகை
5. விபூதிப் பை
6. ருத்ராக்ஷம்
7. சிவலிங்கம்
8. சாளக்கிராமம்
9. விசிறி
10. கம்பு
11. தங்கம்
12. வெள்ளி

புஷ்பம்

கும்ப வஸ்த்ரம்	4 முழத்தில்	2
கும்பத்திற்கு ஆரம் (வாசனை பூவில் கெட்டியது)		3
ஆரம் பத்தி வையாதது		2
ஆரம் பத்தி வைத்தது		3
1 சாண் துண்டு		12
விடுபுஷ்பம் (உதிரி புஷ்பம்) கிலோ		3
வாசனை புஷ்ப சரம் பந்து		1
கதம்ப புஷ்ப சரம் பந்து		1
முகூர்த்தத்திற்கு கழுத்து ஆரம் தேவைப்பட்டால் நிலை ஆரம்		4

(விடுபுஷ்பத்தில் கேந்தி – வாடாமல்லி – கோழிக்கொண்டை– பச்சை இவைகள் இருக்கக் கூடாது)

– சுபம் –

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெரிந்து கொள்வோமா?

ஹிந்துக்களாகிய நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை ஏராளம். சில துளிகளை நாம் இங்கே கொடுத்துள்ளோம். நீங்களும் இது போல் சேகரித்து வழங்கலாமே!

பஞ்சாங்கம் என்றால் என்ன? (பஞ்ச அங்கங்கள்)

1. திதி 2. வாரம் 3. நட்சத்திரம் 4.யோகம் 5. கரணம்

திதிகள்

1. பிரதமை	2. த்வதியை	3. திருதியை
4. சதுர்த்தி	5. பஞ்சமி	6. சஷ்டி
7. சப்தமி	8. அஷ்டமி	9. நவமி
10. தசமி	11. ஏகாதசி	12. துவாதசி
13. திரயோதசி	14. சதுர்த்தசி	

15. பௌர்ணமி / அமாவாஸ்யை

வாரம் (7)

			வைதிக சொற்கள்
ஞாயிறு	-	ரவிவாரம்	பானுவாரம்
திங்கள்	-	சோமவாரம்	இந்து வாரம்
செவ்வாய்	-	மங்கள வாரம்	பௌம வாரம்
புதன்	-	புத வாரம்	ஸௌம்ய வாரம்
வியாழன்	-	குரு வாரம்	குரு வாரம்
வெள்ளி	-	சுக்ர வாரம்	ப்ருகு வாரம்
சனி	-	சனி வாரம்	ஸ்திர வாரம்

நக்ஷத்திரங்கள் (27)

1. அசுவனி
2. பரணி
3. கார்த்திகை (கிருத்திகா)
4. ரோஹிணி
5. மிருகசீருஷம் (மிருகசிரா)
6. திருவாதிரை (ஆர்த்ரா)
7. புணர்பூசம் (புனர்வஸு)
8. பூசம் (புஷ்யா)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9. ஆயில்யம் (ஆச்லேஷா)
10. மகம்
11. பூரம் (பூர்வ பல்குனீ)
12. உத்திரம் (உத்திர பல்குனீ)
13. ஹஸ்தம்
14. சித்திரை
15. சுவாதி
16. விசாகம்
17. அனுஷம் (அனுராதா)
18. கேட்டை (ஜ்யேஷ்டா)
19. மூலம்
20. பூராடம் (பூர்வாஷாடா)
21. உத்திராடம் (உத்திரா ஷாடா)
22. திருவோணம் (ச்ரவணா)
23. அவிட்டம் (ச்ரவிஷ்டா)
24. சதயம் (சதபிஷக்)
25. பூரட்டாதி (பூர்வப்ரோஷ்டபதா)
26. உத்ரட்டாதி (உத்ர ப்ரோஷ்டபதா)
27. ரேவதி

யோகம்

விஷ்கம்பாதி யோகங்கள் - 27

1. விஷ்கம்பம்	2. ப்ரீதி	3. ஆயுஷ்மான்
4. ஸௌபாக்யம்	5. சோபனம்	6. அதிகண்டம்
7. ஸுகர்மம்	8. திருதி	9. சூலம்
10. கண்டம்	11. விருத்தி	12. துருவம்
13. வியாகாதம்	14. ஹர்ஷணம்	15. வஜ்ரம்
16. ஸித்தி	17. வியதீபாதம்	18. வரீயான்
19. பரிகம்	20. சிவம்	21. ஸித்தம்
22. ஸாத்யம்	23. சுபம்	24. சுப்ரம்
25. பிராம்மம்	26. மாஹேந்திரம்	27. வைதிருதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கரணம்

கரணங்கள் – 11

சரகரணம் – 7 மிருகம்

1. பவம் – சிங்கம்
2. பாலவம் – புலி
3. சௌலவம் – பன்றி
4. தைதிலம் – கழுதை
5. கரஜி – யானை
6. வணிஜி – எருது
7. விஷ்டி – கோழி

ஸ்திரகரணங்கள் – 4

ஸ்திரகரணம் – மிருகம்

1. சகுனி – கூகை
2. சதுஷ்பாதம் – நாய்
3. நாகவம் – பாம்பு
4. கிம்ஸ்துக்னம் – புழு

வேதங்கள் 4

1. ரிக்வேதம், 2. யஜூர்வேதம்
3. சாமவேதம் 4. அதர்வண வேதம்

உப வேதங்கள் 4

1. ஆயுர்வேதம் 2. தனுர் வேதம்
3. காந்தர்வ வேதம் 4. அர்த்த சாஸ்த்ரம்

வேதாங்கங்கள் 6

1. சிஷா 2. கல்பம் 3. வியாகரணம்
4. நிருக்தம் 5. ஜோதிஷம் 6. சந்தஸ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேத தர்சனங்கள் 6

1. சாங்கிய தர்சனம் 2. யோக தர்சனம்
3. வைசேஷிக தர்சனம் 4. நியாய தர்சனம்
5. மீமாம்ச தர்சனம் 6. வேதாந்த தர்சனம்

முக்கியமான உபநிஷத்துகள்

1. ஈஸ்வாஸ்ய உபநிஷத் 2. கேனோ உபநிஷத்
3. கடோபநிஷத் 4. ப்ரஸ்னோபநிஷத்
5. முண்டகோபநிஷத் 6. மாண்டுக்யோபநிஷத்
7. தைத்ரியோபநிஷத் 8. ஐதரேயோபநிஷத்
9. சாந்தோக்யோபநிஷத் 10.பிரஹதாரண்யகோபநிஷத்

இதிஹாசங்கள்

1. ராமாயணம் 2. மகாபாரதம் 3. ஸ்ரீமத்பாகவதம்

யுகங்கள் 4

1. க்ருதயுகம் 2. த்ரேதாயுதம்
3. துவாபரயுகம் 4. கலியுகம்

முக்திதரும் 3 புறை தலங்கள்

பிறந்தால் - திருவாரூர்
இறந்தால் - காசி
நினைத்தால் - திரு அண்ணாமலை

தமிழ் ஆண்டுகள் 60

1. பிரபவ	2. விபவ	3. சுக்ல
4. பிரமோதூத	5. ப்ரஜோத்பத்தி	6. ஆங்கிரஸ
7. ஸ்ரீமுக	8. பவ	9. யுவ
10. தாது	11. ஈஸ்வர	12. வெகுதான்ய
13. பிரமாதி	14. விக்ரம	15. விஷு
16. சித்திரபான	17. சுபானு	18. தாரண
19. பார்த்திவ	20. வ்யய	21. ஸர்வஹித்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

22. ஸர்வதாரி	23. விரோதி	24. விக்ருதி
25. கர	26. நந்தன	27. விஜய
28. ஜய	29. மன்மத	30. துன்முகி
31. ஹேவிளம்பி	32. விளம்பி	33. விகாரி
34. சார்வரி	35. பிலவ	36. சுபகிருது
37. சோபகிருது	38. குரோதி	39. விஸ்வாவஸு
40. பராபவ	41. பிலவங்க	42. கீலக
43. ஸௌமிய	44. சாதாண	45. விரோதகிருது
46. பரிதாபி	47. ப்ரமாதீச	48. ஆனந்த
49. ராக்ஷஸ	50. நள	51. பிங்கள
52. காளயுத்தி	53. சித்தாரத்தி	54. ரௌத்ரி
55. துன்மதி	56. துந்துபி	57. ருத்ரோத்காரி
58. ரக்தாக்ஷி	59. குரோதன	60. அக்ஷய

மாதங்கள்

சித்திரை	மேஷம்	}	வஸந்த ருது
வைகாசி	ரிஷபம்		
ஆனி	மிதுனம்	}	க்ரீஷ்ம ருது
ஆடி	கடகம்		
ஆவணி	சிம்மம்	}	வர்ஷ ருது
புரட்டாசி	கன்னி		
ஐப்பசி	துலாம்	}	சரத் ருது
கார்த்திகை	விருச்சிகம்		
மார்கழி	தனுசு	}	ஹேமந்த ருது
தை	மகரம்		
மாசி	கும்பம்	}	சிசிர் ருது
பங்குனி	மீனம்		

அயனங்கள் – 2

1. ஆடி முதல் மார்கழி வரை – தக்ஷிணாயனம்
2. தை முதல் ஆனி வரை – உத்தராயணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பஞ்சபூதங்கள்		க்ஷேத்திரங்கள் (கோவில்கள்)
ஆகாசம்	(வானம்)	சிதம்பரம்
பூமி	(நிலம்)	காஞ்சிபுரம்
வருணன்	(நீர்)	திருஆனைக்கோவில்
அக்னி	(நெருப்பு)	திருவண்ணாமலை
வாயு	(காற்று)	காளஹஸ்தி

பஞ்சகவ்யம்

பசும்பால், தயிர், நெய், சாணாம், கோமூத்ரம்

சப்தமோக்ஷபுரி 7

1. அயோத்யா
2. மதுரா
3. மாயா (ஹரித்வார்)
4. காகி
5. காஞ்சி
6. அவந்திகா
7. துவாரகா

புராணங்கள் 18

1. பிரம்ம புராணம்
2. விஷ்ணுபுராணம்
3. லிங்கபுராணம்
4. கூர்மபுராணம்
5. கருடபுராணம்
6. பாகவதபுராணம்
7. பவிஷ்யபுராணம்
8. பத்மபுராணம்
9. சிவபுராணம்
10. மார்க்கண்டேயபுராணம்
11. நாரதபுராணம்
12. வராஹபுராணம்
13. வாமனபுராணம்
14. மத்ஸ்யபுராணம்
15. ப்ரம்மாண்டபுராணம்
16. அக்னிபுராணம்
17. ப்ரம்மவைவர்த்தபுராணம்
18. ஸ்கந்தபுராணம்

முருகனின் அறுபடைவீடு

1. திருத்தணி
2. சுவாமிமலை
3. பழமதிர்ச்சோலை,
4. திருஆவனன்குடி (பழனி)
5. திருப்பரன்குன்றம்
6. திருச்செந்தூர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆய கலைகள் 64

1. அட்சர இலக்கணம்
2. லிகிதம் (அழகிய கையெழுத்து)
3. கணிதம்
4. வேதம்
5. புராணம்
6. வியாகரணம்
7. நீதிசாஸ்திரம்
8. ஜோதிட சாஸ்திரம்
9. தரும சாஸ்திரம்
10. யோக சாஸ்திரம்
11. மந்திர சாஸ்திரம்
12. சகுண சாஸ்திரம்
13. சிற்பசாஸ்திரம்
14. வைத்தியசாஸ்திரம்
15. ரூபசாஸ்திரம் (சாமுத்ரிகா லட்சணம்)
16. இதிகாசம்
17. காவ்யம்
18. அலங்காரம் (அணி இலக்கணம்)
19. மதுரபாஷணம் (சொல் இலக்கணம்)
20. நாடகம்
21. நிருத்தம் (வைதீக சொற்களும் பொருளும்)
22. சப்த பிரம்மம் (ஒலிவிஞ்ஞானம்)
23. வீணை
24. வேணு (புல்லாங்குழல்)
25. மிருதங்கம்
26. தாளம் (கை - தாளம்)
27. அஸ்திர பரீட்சை (வில் வித்தை)
28. கனக பரீட்சை (தங்கத்தை சோதித்தல்)
29. ரதப் பரீட்சை (தேரோட்டுதல்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

30. கஜப் பரீட்சை (யானை ஓட்டுதல்)
31. அசுவ பரீட்சை (குதிரை ஓட்டம்)
32. இரத்தின பரீட்சை (மணிகளை சோதித்தல்)
33. பூமிப் பரீட்சை
34. சங்கிராம லட்சணம் (போர்கலை)
35. மல்யுத்தம்
36. ஆகர்ஷணம் (மந்திர சக்தியால் வசீகரித்தல்)
37. உச்சாடனம் (மந்திரத்தால் பேய்களை விரட்டுதல்)
38. வித்வேஷணம் (மந்திரத்தால் வெறுப்பை உண்டாக்குதல்)
39. மதன சாஸ்திரம் (காம சாஸ்திரம்)
40. மோகனம் (மந்திரத்தால் மயக்குதல்)
41. வசீகரணம் (கவர்ச்சி மந்திரம்)
42. ரசவாதம் (மற்ற லோகங்களை பொன்னாக்குதல்)
43. கந்தருவ வாதம் (கந்தர்வர்களைப்பற்றிய அறிவு)
44. பைபீலவாதம் (உயிர்வகைகளின் மொழிகளை உணர்தல்)
45. கௌதுக வாதம் (வருந்தியமனதை தேற்றும் கலை)
46. தாதுவாதம் (நாடிபார்த்தல்)
47. காரூடம் (விஷக்கடி மந்திரங்கள் பயில்தல்)
48. நஷ்டம் (இழந்த பொருட்களைதிரும்பப்பெறும் முயற்சி)
49. முஷ்டி (கையடக்கம் அறிதல்)
50. ஆகாய பரிட்சை (அருபியாகி உலாவுதல்)
51. ஆகாய கமனம் (வெளியில் உலாவுதல்)
52. பரகாய ப்ரவேசம் (வேறொருவர் சரீரத்தில்புகுதல்)
53. அத்ருசியம் (தன்னுடலை மறைத்தல்)
54. இந்திரஜாலம் (கண் கட்டு வித்தை)
55. மஹேந்திரஜாலம்
(தரையிலும், வானத்திலும் அற்புதங்களை காட்டுதல்)
56. அக்னிஸ்தம்பம் (தீ தன்னை சுடாமல் ஆக்குதல்)
57. ஜல ஸ்தம்பம் (நீரில் நடத்தல்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

58. வாயு ஸ்தம்பம் (காற்றை அடக்குதல்)
59. த்ருஷ்டிஸ்தம்பம் (கண்களை மயக்குதல்)
60. வாக்கு ஸ்தம்பம் (பேச்சை அடக்குதல்)
61. சுக்ல ஸ்தம்பம் (வீரியத்தை கட்டுவது)
62. கண்ணு ஸ்தம்பம் (பொருட்களை மறைந்து வைத்தல்)
63. கட்க ஸ்தம்பம்
(வாள் முதல் ஆயுதங்களின் வலிமைகளை அழித்தல்)
64. அவஸ்தை பிரயோகம் (ஐந்து அவஸ்தைகளாகிய விழிப்பு)

ஆஸ்ரமங்கள் 4

1. பிரம்மசர்யம்
2. கிருஹஸ்தம்
3. வானபிரஸ்தம்
4. சன்யாசம்

வர்ணங்கள் 4

1. பிராஹ்மணர்
2. க்ஷத்திரியர்
3. வைஸ்யர்
4. சூத்திரர்

புருஷார்த்தங்கள் 4

1. தர்மம் (அறம்)
2. அர்த்தம் (பொருள்)
3. காமம் (இன்பம்)
4. மோக்ஷம் (வீடு)

யோகங்கள் 4

1. கர்மயோகம்
2. ஞானயோகம்
3. ராஜயோகம்
4. பக்தியோகம்

பஞ்ச மகா யக்ஞங்கள்

1. பிரஹ்மயக்ஞம்
2. தேவயக்ஞம்
3. பிதுர்யக்ஞம்
4. அதிதியக்ஞம்
5. பூதயக்ஞம்

ரிணங்கள் (கடமை)

1. தேவ ரிணம்
2. ரிஷி ரிணம்
3. பித்ரு ரிணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஞானமார்கம்

1. ஸ்ருதி (வேதங்கள்) 2. ஸ்மிருத்தி

சோடச கிரியைகள் (16 வகை கிரியைகள்) மனிதனின் பிறப்பிலிருந்து மரணம் வரை, கடைப்பிடிக்க வேண்டிய கிரியைகள்.

1. கர்பாதானம்
2. பும்ஸவனம் கர்பத்தில் (2 & 3 மாதம்)
3. சீமந்தம் (கர்பத்தில் 6ம் மாதம்)
4. ஜாதகர்மம்
5. நாமகர்ணம்
6. நிஷ்க்ரமணம்
7. அன்னப்ராசனம்
8. சௌளம் (முடி எடுத்தல்)
9. வித்யாரம்பம்
10. உபநயனம்
11. ஸமாவர்த்தனம் (படிப்பு பூர்த்தி)
12. விவாஹம்
13. கார்ஹபத்யம் (தர்மங்களை அனுஷ்டித்து கிரஹஸ்தாஸ்ரமம்)
14. வானப்ரஸ்தம்
15. ஸன்யாசம்
16. அந்த்யேஷ்டி (மரண சடங்குகள்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



வைக்கவேண்டிய முறை

கும்பத்தின் பெயர்கள்

1. மிருத்யுஞ்ஜயர்
2. அதிதேவதை
3. பிரத்யதி தேவதை
4. பிரஜாபதி
5. யமன்
6. நதிகள்
7. துர்கா
8. கணேசன்
9. விஷ்ணு
10. வருணன்
11. இந்திரன்
12. அக்னி
13. யமன்
14. நிருதி
15. வருணன்
16. வாயு
17. குபேரன்
18. ஈசானன்
19. புண்யாஹா வாசனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ஜகத்குரு காஞ்சி காமகோடி
சந்திர சேகரேந்திர
சரஸ்வதி ஸ்வாமிகள்



ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ சிருங்கேரி
சாரதா பீடாதிபதி பாரதி
தீர்த்த சுவாமிகள்

SOUTHERN PRINTO BIND, Tvpm - 2 Ph: 2346914